1992 ஜனவரி 30]

ஏற்கும் நிகழ்ச்சியாகவும், நம்முடைய பேரவைச் செயலகத்திற்குப் பின்புறம் உள்ள பயிற்சி மைதானத்தில் நடைபெற இருக்கிற நிகழ்ச்சிக்காக, பேரவை இப்போது ஒத்திவைக்கப்பட்டு, மீண்டும் 11.30 மணிக்குக் கூடும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். பேரவை இப்போது ஒத்திவைக்கப்படுகிறது.

பின்னர் பேரவை முற்பகல் 10.48 மணியளவில் ஒத்திவைக்கப் பெற்றது.

முற்பகல் 11-30

முற்பகல் 11.30 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. இரா. முத்தையா அவர்கள் தலைமையில் பேரவை மீண்டும் கூடியது.

4. அறிவிப்புகள்—தொடர்ச்சி.

(ஆ) மாற்றுத் தலைவர்கள் பட்டியல்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு. மாற்றுத் தலைவர்கள் பட்டியல். தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி 9 (1)-ன் கீழ், கீழ்க்கண்ட உறுப்பினர்களை இப் பேரவையின் மூன்றாம் கூட்டத் தொடரின் மாற்றுத் தலைவர்களாக நியமிக்கிறேன்:

1. திரு. ம. சின்னசாமி.
2. திரு. வ. சத்தியமூர்த்தி.
3. திரு. ஆர். சிங்காரம்.
4. திரு. வே. தம்புசாமி.
5. திரு. நா. சா. பழனிசாமி.

5. சிறப்புக் குறிப்புகள்.

(அ) வினாப் பட்டியலிலுள்ள இரு வினாக்கள் எடுக்கப் பெறாதது பற்றி அறிவிப்புச் செய்யவேண்டியதன் அவசியம் குறித்துக் குறித்து.

திரு. ச. இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கேள்விப் பட்டியலிலே இரு கேள்விகள் இருந்தன. அவற்றின் நிலை என்னவாயிற்று?